செ.வெ.எண். நாள்.02.05.2018.

திருநெல்வேலி மாவட்டம், நொச்சிகுளத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகள் நல்வாழ்வுப் பணிமனையில் திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / அரசு முதன்மை செயலாளர் முனைவர் ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

-------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, நொச்சிகுளத்தில் கிராம சுயாட்சி இயக்கத் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறையின் மூலம் ‘‘விவசாயிகள் நல்வாழ்வுப் பணிமனை’’ நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.05.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / அரசு முதன்மை செயலாளர்/ தொழில்கள் ஆணையர் மற்றும் இயக்குநர் முனைவர் ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு 24 விவசாயிகள் மற்றும் 1 விவசாய கூட்டுப் பண்ணையத்திற்கு ரூ.5.62 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / அரசு முதன்மை செயலாளர் அவர்கள் பேசியதாவது–

இந்தியா முழுவதும் கிராம சுயாட்சி இயக்கத் திட்டத்தின் மூலம் மத்திய அரசின் 7 திட்டங்கள் முழுமையாக செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 29 கிராம ஊராட்சிகளில் மே 5ம் தேதிக்குள் மத்திய அரசின் 7 திட்டங்களும் 100 சதவீதம் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நொச்சிகுளம் கிராமத்திலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 100 சதவீதம் வங்கிக் கணக்கு துவக்குவதல், வங்கியின் மூலம் காப்பீட்டுத் திட்டங்களில் முழுமையாக சேர்தல், மின்சாரத்தை சேமிக்கும் LED பல்புகள் வழங்குதல், எரிவாயு இணைப்பு இல்லாத அனைவருக்கும் இணைப்புகள் வழங்குதல், அனைவருக்கும் மின் இணைப்பு வழங்குதல் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படுகிறது. இத்திட்டம் வரும் காலங்களில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது. அரசு நலத்திட்ட உதவிகளை பெறும் நீங்கள், மற்ற விவசாயிகள், பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டுமென பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது–

கிராம சுயாட்சி இயக்கத்தில் இன்று விவசாயிகளுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் விவசாயிகள் நல்வாழ்வுப் பணிமனை நடத்தப்படுகிறது. இங்கு விவசாயிகளுக்கு அரசின் திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறப்படுகிறது. மேலும், நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. நொச்சிகுளம் கிராமத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் 11 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளும், 10 விவசாயிகளுக்கு புளுரோட்டஸ்கிட்டும், தலா ரூ.15 ஆயிரம் மானியத்தில் இரண்டு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனத்திற்கு பைப் லயன்களும், ஒரு விவசாயிக்கு ரூ.32,300/– மானியத்தில் சொட்டுநீர் பாசனம் மழைத் தூவுவான் கருவியும், ஒரு விவசாய கூட்டுப் பண்ணைக்குழுவிற்கு ரூ.5 இலட்சம் மானியத்தில் ஒரு வைக்கோல் கட்டும் இயந்திரமும், ஒரு பவர் டில்லர், 2 புல் வெட்டும் இயந்திரங்கள் உள்ளிட்ட கருவிகள் என மொத்தம் 25 விவசாயிகளுக்கு ரூ.5.62 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் கால்நடைகளுக்கு தடுப்பூசிகளும் போடப்படுகிறது. இதுபோன்ற திட்டங்களின் மூலம் ஏழை விவசாயிகளின் உற்பத்தியை அதிகரித்து வருவாயை இரண்டு மடங்காக உயர்த்திடும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மத்திய அரமசு சுயாட்சி இயக்க பார்வையாளர்கள்/சார்பு செயலாளர்கள் திரு.கலாதரன், திரு.பத்மநாபன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் திரு.செந்தில்வேல்முருகன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, வேளாண்மைத் துறை துணை இயக்குநர்கள் திரு.உத்தண்டராமன் திரு.பாலசுப்பிரமணியன், திரு.முகைதீன், அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி நிலைய தலைவர்/பேராசிரியர் திரு.ஆறுமுகச்சாமி, தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் திரு.அற்புதம், வேளாண்மை உதவி இயக்குநர் திரு.அசோக்குமார், வேளாண்மை அலுவலர் திரு.எழில், முக்கிய பிரமுகர்கள் திரு.கபேரியல்ராஜன், திரு.முத்துக்குட்டிபாண்டியன், திரு.பெரியபெருமாள் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.